Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**
An ISO 9001 : 2008 Certified
Ti Nb Ir Ta Ru Pt

#48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

# "கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"

## GOAL 2012-2013

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 100% ↑
- **Products for ...**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** : 100% ↓

## TESTIMONIALS

- **Customers...**
  - Up to July 12 : 587 Nos.
  - Up to June 12 : 582 Nos.
- **Performance July 12 ...**
  - Turnover growth : 2.99%
  - Employment growth : 3.41%
  - 100% Attendance : 19.32%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec GRP Mandrels – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade (We Deliver Value Chain) – Portal for Exotic Metals
- Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSC Pattern School)

## ACHIEVEMENT




## சிறந்த 10 வரிகள்

1. மற்றவர்களுக்கு நீ நல்லவனாக இருக்கும் போது, உனக்கே நீ நல்லவனாக இருக்கிறாய்.
2. வேலைக்காரனாக இருக்கக் கற்றுக்கொள், பிறகு எஜமானனாகும் தகுதி தானாக வரும்.
3. ஒரு மனிதன் பல முறை தோற்கலாம், ஆனால் தன் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல், இன்னொருவனைக் காரணம் காட்டத் துவங்கும் போது, அவன் வெற்றி வாய்ப்பை இழக்கிறான்.
4. உணர்ச்சிக்கு முதலிடம் கொடுக்காமல், உழைப்புக்கு முதலிடம் கொடுத்தால், வாழ்க்கை உன்னதமாக இருக்கும்.
5. மற்றொருவனைப் பற்றி, உன்னிடம் ஒருவன் வாயைத்திறந்தால், நீ உன் காதை மூடிக் கொள்.
6. மன்னித்தல் தண்டித்தலை விட சிறந்தது ஏனெனில் தண்டித்தல் மிருகத்தனம், மன்னித்தல் மனித குணம்.
7. நீங்கள் பிறருக்கு தரும் பரிசுப்பொருளை விட மென்மையானது, நீங்கள் பழகும் விதம் தான்.
8. அடுத்தவரின் வாழ்க்கையுடன் ஒப்பிடாமல் தன் வாழ்க்கையை மகிழ்ச்சியாக நினைப்பவன் புத்திசாலி.
9. ஆனந்தமாக இரு, அடக்கமாக வாழ், தைரியசாலியாகச் செயல்படு, நேர்மையாக இரு, இதுவே வெற்றியின் பாதை.
10. தனக்கென வாழ்பவன் தாழ்ந்தவன் ஆகிறான், பிறருக்கென வாழ்பவன் பெருவாழ்வு வாழ்கிறான்.

தொகுத்தளித்தவர் : Ms. P.E. Nancy
Director – Admin

## மதுக்கு எதிரான தனிநபர் அகிம்சைப் போராட்டம்



தமிழருவி மணியன் ராமதாஸ், அன்புமணி ராமதாஸ் ஆகியோர் மதுவுக்கு எதிராக போராடி வருவது தெரியும். ஆனால், வெளியே தெரியாமல், எந்த எதிர்ப்பும் இல்லாமல் தமிழகத்தில் எத்தனையோ பேர் குடிக்கு எதிராகப் போராடி வருகிறார்கள். அவர்களில் ஒருவர்தான், சேலத்தைச் சேர்ந்த டாக்டர் ஃப்ராங்கிளின் ஆசாத் காந்தி. தானே நெய்த கதர் துணியில் ஆடை தைத்து அணிந்து வரும் அளவுக்கு காந்தியக் கொள்கை மீது ஈர்ப்பு கொண்டவர். தினமும் மாலை நேரத்தில் டாஸ்மார்க் கடைக்கு வரும் இவர், குடிக்க வேண்டாம் என்று, குடிமகன்களிடம் பிரச்சாரம் செய்து வருகிறார். பாருக்குள் குடித்துக்கொண்டு இருக்கும் குடிமகன்களிடம் குடியின் தீமைகளைப் பற்றி அன்புடன் எடுத்துச் சொல்கிறார். இதை எல்லாம் விட இன்னும் ஒருபடி மேலே சென்று, குடிகாரர்களின் காலில் விழுந்து குடிக்க வேண்டாம் என்று கெஞ்சுகிறார்.

இதற்காக, கோபக்கார குடிமகன்களிடம் இவர் பட்ட காயங்களும் அதிகம்.

Compiled by : Mr. C. Abilash
Facilitation

## FUNCTIONAL WISHES



**Vinayagar Chadurti**
**19th September**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant | : Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel : 22294565 |
| | M/s. Jeya Clinic, |
| | Tel : 98408 73107 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை
வளர்ப்பினிலே!

**Mr. C. Baskaran** — **1st Sep**
Purchase



**Mr. K. Manivannan** — **4th Sep**
Manager – Fib tec

**Mr. V. Gokulakrishnan** — **6th Sep**
Fib tec Production

**Mr. M. Chinnathambi** — **16th Sep**
Coating

**Mr. K. Suresh Kumar** — **19th Sep**
Production

**Mr. S. Dinoy** — **29th Sep**
Coating

**Best Wishes from Tiaano Employees**

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

ஒரு முனிவர் கையில் ஒரு பையோடு மலையேறிக் கொண்டிருந்தார். மூச்சு வாங்கியது. திரும்பி பார்த்தால் பன்னிரெண்டு வயது சிறுமி ஒருத்தி, தன் மூன்று வயது தம்பியைத் தூக்கிக் கொண்டு மிக சாதாரணமாக மலையேறிக் கொண்டிருந்தாள்.

முனிவர் கேட்டார், “மகளே! என்னால் இந்தப் பையை சுமந்து கொண்டு ஏறவே முடியவில்லை. உனக்கு சிரமமாக இல்லையா?” அவள் சொன்னாள், “ஐயா! நீங்கள் ஒரு சுமையைத் தூக்கிக் கொண்டிருக்கிறீர்கள். நான் என் தம்பியைத் தூக்கிக் கொண்டிருக்கிறேன்.

அன்பு எதையும் சுமக்குமென்று அறிந்தார் முனிவர்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

### அரிசி உணவு சர்க்கரை நோய்க்குக் காரணமா?

அரிசி உணவு, சர்க்கரை நோய்க்குக் காரணமாக இருக்கலாம் என்று இதுவரை பரவலாக கருதப்பட்டு வந்தது. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆய்வானது, இக்கருத்து தவறானது என்பதை எடுத்துக் காட்டியிருக்கிறது. உணவு உண்டதற்குப் பிறகு இரத்த சர்க்கரை அளவுகளை அதிகரிக்கின்ற திறனின் அளவுகோலாக இருக்கும் சினைசிமிக் இன்டெக்ஸ் (GI) என்பது இந்திய நடுத்தரவர்க்க மக்கள் அதிகமாக பயன்படுத்தும் இரு அரிசி ரகங்களில் மிகக் குறைவாகவே இருப்பதை இந்த ஆய்வு கண்டறிந்துள்ளது. இந்த ஆய்வில் உலகெங்கும் பயன்படுத்தப்படும் 233 அரிசி ரகங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன.

ஸ்வர்ணா மற்றும் மசூரி என்ற இரு அரிசி ரகங்களில் GI அளவுகள் – 55க்கும் குறைவாகவே இருக்கின்றன. இந்தியாவில் தற்போது ஏறக்குறைய 6 கோடி நபர்களுக்கு சர்க்கரை நோய் இருக்கிறது. தங்கள் உணவில் உணவை சேர்த்துக் கொள்ளலாமா என இவர்கள் இனி கவலைப்பட வேண்டியதில்லை என்பதை இந்த ஆய்வு வழங்கும் நற்செய்தி.

ஆற்றலை தருவதற்கு அவசியமான மாவுச்சத்து (கார்போ ஹைட்ரேட்) அரிசியில் அதிகமாக இருக்கிறது. அதிக உடல் உழைப்பு அல்லது செயல்பாட்டைக் கொண்டிருக்கும் விளையாட்டு வீரர்கள் போன்றவர்களுக்கு கார்போ ஹைட்ரேட் அதிகமாக தேவைப்படுகிறது. ஆனால் குறைந்த உடல் உழைப்பு வாழ்க்கை முறையை கொண்டிருக்கும் நபருக்கு அதிக சக்தி தேவைப்படாது என்பதால் இவர்கள் அரிசியை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்வதை குறைக்க வேண்டும்.

Compiled by : Mr. K. Manivannan
Fib tec

### ஆசை

ஆசை என்பது அவசியமானது. அது அறிவின் சிறப்பு உதயமாக இருக்க வேண்டும். அது இல்லாத தோற்றம் தான் பேராசை. ஆசை அறிவின் சிறப்பு இயக்கமாக நடந்தால் விளைவு நல்லதே ஆகும் இல்லையெனில் எதிலும் செயல் திறம்பட அமையாது என்பதை உணர்ந்து வாழ்வில் ஆசையை சீரமைத்து எதிலும் வெற்றி காண்போம்.

Compiled by : Mr. Dhayanidhi
Production

## தெரிந்து கொள்வோம்

**நீங்கள் வாங்கிய மருந்து போலியானதா? ஒரிஜினலா? என்று உடனே தெரிந்து கொள்ள...**

1. மருந்து அட்டை அல்லது பெட்டியின் மேல் ஒன்பது இலக்க எண் (Unique Product Identification Code) ஒன்று இருக்கும்.

2. அந்த நம்பரை 990109910 என்ற எண்ணுக்கு மெசேஜ் செய்யவும்.

3. பத்து வினாடிகளில் அந்த மருந்தின் பேட்ச் நம்பர், காலாவதி தேதி மற்றும் மருந்து தயாரித்த கம்பெனி பெயர் ரிப்ளை ஆகா வரும்..

Collected by : Mrs. M. Shahin
Marketing

**சித்தர்கள் சொன்ன மருத்துவக் குறிப்பு**

1. சோற்றுக்கற்றாழையைச் சித்த மருத்துவத்தில் 'குமரி' என அழைப்பர். காயகல்பத்தில் அதுவும் ஒரு மூலிகையாகச் சேர்க்கப்படுகின்றது. அதன் நடுப்பகுதியைப் பிளந்து அதன் கசப்பான சாற்றை எடுத்துச் சற்றே அலசி பின் மோரில் கலந்து தினம் தோறும் உண்டுவந்தால் அல்சர் போன்ற நோய்கள் குணமாகும். மேலும் உடலில் இளமைத் தன்மை அதிகரிக்கும்.

2. தினம்தோறும் ஒரு நெல்லிக்காய் சாப்பிட்டு வந்தால் நாள்பட்ட தோல் நோய்கள் குணமாகும். நோய் எதிர்ப்பு சக்தி உடலில் அதிகரிப்பதுடன் முகப்பொலிவும் உண்டாகும்.

3. சர்க்கரை நோய் கட்டுப்பட வெந்தயத்தைப் பொடி செய்து தினம்தோறும் ஒரு டீஸ்பூன் வெந்நீரில் கலந்து சாப்பிட்டு வரவேண்டும். மேலும் சிறியாநங்கை, பெரியாநங்கையின் சாற்றையும் பயன்படுத்தலாம்.

4. செம்பருத்தி பூவைக் காயவைத்து பொடி செய்து தலையில் சீயக்காய் போலத் தேய்த்துக் குளித்து வந்தால், பொடுகுத் தொல்லை போகும். நன்கு தலைமுடி வளரும். முடிகொட்டுவதும் நின்றுவிடும். மேலும் கண்களுக்கும் உடலுக்கும் குளிர்ச்சி தரும்.

5. தேனை தினமும் வெந்நீரிலோ, பாலிலோ சிறிதளவு கலந்து குடித்து வர உடலில் நோய் எதிர்ப்பு சக்தி உண்டாகும். நாள்பட்ட இருமல், சளி குணமாகும்.

Compiled by : Mr. D.S. Anish
System Admin

## 10-வது ஆண்டு (Decennial) அலுவலர் தின விழா

**நிகழ்ச்சி நிரல்** (26.08.2012 ஞாயிற்றுக் கிழமை)

காலை 6.00 : பூஜை

விளக்கேற்றுபவர் : **திரு. மதி சி. கணேசன்** அவர்கள்

காலை 9.00 : விளையாட்டு நிகழ்ச்சிகள்

காலை 11.00 : விழா துவக்க நிகழ்ச்சி

வரவேற்புரை **Dr. G.S. விஸ்வநாத்** அவர்கள்

தொடக்கவிழா அறிவிப்பு **Adv. M.K. கோவிந்தன்,**

ஆண்டு விழா நினைவு மலர் வெளியிடுபவர்

**திரு. K. வெங்கடாச்சலம்** அவர்கள், DGM UCO Bank, Chennai

விருது வழங்குதல்

- 10 வருட சேவையை பாராட்டி விருது
- 5 வருட சேவையை பாராட்டி விருது
- 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் 80% மற்றும் 80% மேல் மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கான விருது.

பகல் 12.45 : விருந்து

மாலை 3.30 : பரிசளிப்பு

மாலை 5.00 : இறைவணக்கம் – **Tiaano** குழந்தைகள்

மாலை 5.05 : கலை நிகழ்ச்சி – **Tiaano** குழந்தைகள்

மாலை 7.00 : **"Hari Melodies"** வழங்கும் **Vijay TV Super Singer Junior Season 3** "செல்ல குரல்களின் இசை நிகழ்ச்சி"

இரவு 9.40 : நன்றியுரை

**திரு. S. சிவக்குமார்** – Manager Marketing

இரவு 9.45 : இரவு விருந்து

நிகழ்ச்சி தொகுப்பு : **திரு. M. குமார்** – Design

**டயானோ நிறுவனம் மற்றும் அதன் தொழிலாளர்க் குழுவின் சார்பாக அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

## நம்பித்தான் ஆகவேண்டும்
## 5S (தொடர்ச்சி XI)

**நமக்குள் ஓர் அணில்**

முதலாவதாக, ஒரு தொழிற்சாலை சுத்தமாக இல்லாவிட்டால், அதாவது, பயன்படுத்திய பயன்படுத்தாத கருவிகள், உபகரணங்கள், பாதி வேலை முடிந்த அரைகுறை சமாச்சாரங்கள், குப்பைக் கூளங்கள் என்று எல்லாம் மொத்தமாகக் குவிந்து கிடந்தால், என்னென்ன பிரச்சனைகளெல்லாம் வரலாம்?

- தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய கருவிகளைத் தேவைப்படும் நேரத்தில் சட்டென்று கண்டறிய முடியாது.
- தரைமுழுவதும் இப்படிப் பொருள்களைப் பரப்பிவைத்திருந்தால், தொழிலாளர்கள் நடமாடுவது சிரமம். தங்களுக்குள் பேசிக்கொள்வதும் பொருள்களைப் பரிமாறிக் கொள்வதும் கஷ்டம்.
- தொழிலாளர்கள் யாரேனும் கீழே தடுக்கி விழுந்து காயப்படுகிற வாய்ப்புகளும் உண்டு.

## கவிதைகள்

### நெஞ்சைத் தொட்ட சில வரிகள்

- முடியும் என்பது மூலதனம்
  முடியாது என்பது மூடத்தனம்.

- நீ நடந்துபோக பாதை இல்லையே
  என்று கவலைப்படாதே,
  நீ நடந்தால் அதுவே ஒரு பாதை.

- புரிந்து கொண்டால் கோபம் கூட
  அர்த்தம் உள்ளதாய் தெரியும்,
  புரியவில்லை என்றால்
  அன்பு கூட அர்த்தம் அற்றதாய் தோன்றும்...!

- யாருக்காகவும் உன்னை மாற்றிக் கொள்ளாதே
  ஒரு வேலை மாற நினைத்தால்,
  ஒவ்வொரு மனிதர்களுக்கும்,
  நீ மாற வேண்டி இருக்கும்.

- உனக்காக சிரிக்கும் உதடுகளை விட...!
  உனக்காக கண்ணீர் விடும் கண்களை நேசி...!
  அது உப்பாக இருந்தாலும்
  உண்மையாக இருக்கும்...!

Compiled by : Mrs. M. Indumathi
Purchase

## சிந்தைனைக்கு

- “வாழ்க்கை என்பது உண்மையில் எளிதானது, ஆனால், சில வேளைகளில் அதை சிக்கலானதாக மாற்றவேண்டுமென்று நாம் வீம்பு செய்கிறோம்”.

- தனது ஆசிரியர் மீது கொண்டுள்ள மரியாதையை, ஆசிரியரைவிட இன்னும் அதிகமாக சாதிப்பதன் வழியாகவே ஒரு உண்மையான மாணவன் உறுதிப்படுத்துகிறான்.

**உத்வேகம் அளிக்கும் மந்திரம்**

கைகளை விரித்து, திறந்த மனதோடு மாற்றங்களை வரவேற்றிடுங்கள். ஆனால், உங்கள் மதிப்பீடுகளை ஒருபோதும் விட்டுவிடாதீர்கள்.

Compiled by : K. Manivannan
Fib tec

### அறிவிப்பு

→ நடைபெறவிருக்கும் 10வது(2012) அலுவலர் தினவிழாவினை முன்னிட்டு ஸ்டால் போட விருப்பம் உள்ளவர்கள் தங்களுடைய விவரங்களை திரு. P. பாலசுப்ரமணியன் (9965086270) அவர்களிடம் முன்பதிவு செய்து கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். சென்ற வருடம் ஸ்டால் வைத்தவர்களின் விவரம் பின்வருமாறு.

1. புத்தகம்– M/S.தி ஓசியன், Mr. பாலச்சந்திரன(R&D)
2. டிஷ் டிவி – Mr. சேர்மக் கனி
3. கைவினைப்பொருட்கள் – Mrs. P. வசந்தா

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

- ஒழுங்காகப் பத்திரப்படுத்தாமல் கீழே எறியப்பட்டிருக்கும் ரசாயனப் பொருள்கள், பயனின்றி அழிந்துவிடலாம். கருவிகள், உபகரணங்கள் துருப்பிடித்து வீணாகலாம்.

இதுபோல் இன்னும் பல காரணங்களால்தான், தொழிலாளிகள் தினந்தோறும் தங்களுடைய பணியிடங்களுக்குச் செல்வதைப் பெருமையாக நினைப்பதில்லை என்று ஆய்வுகளில் கண்டறியப்பட்டிருக்கிறது. தொழிலாளிகள் மனப்பூர்வமாக உழைக்காமல் இப்படி சும்மா கடமைக்குச் செயல்பட்டுக் கொண்டிருந்தால் உற்பத்தி எப்படி அதிகரிக்கும்?

முக்கியமான இந்தக் கேள்விக்கு ஜப்பானியர்கள் எப்படி விடை கண்டறிந்தார்கள் என்பதைப் பார்ப்பதற்கு முன்னால், நாம் எல்லாரும் நம்மையே கேட்டுக்கொள்ளவேண்டிய இன்னொரு கேள்வி–இந்தப் பிரச்சனைகள் தொழிற்சாலைகளுக்கு மட்டுமானதுதானா?

ம்ஹூம்! இல்லவே இல்லை. சந்தேகமிருந்தால், நம்மைச் சுற்றிலும் இருக்கிற உலகத்தைப் பாருங்கள். அதில் எத்தனை சதவிகித ஒழுங்கு தென்படுகிறது?
நம் வீட்டிலேயே, முக்கியமான விருந்தினர்கள் வந்துபோகிற நாட்களில்தான் விசேஷமாகச் சுத்தம் செய்யும் நடவடிக்கைகளில் இறங்குகிறோம். அதுவரை, போட்டது போட்ட இடத்தில்தானே கிடக்கிறது?

அலுவலகங்களில், நூற்றுக்குப் பத்து மேஜைகளாவது ஒழுங்காக, சுத்தமாக இருக்கிறதா? எந்த அலமாரியிலாவது பொருள்களைத் திணிக்காமல் ஒழுங்காக அடுக்கிவைத்திருக்கிறோமா?

இருசக்கர வாகனங்களைப் பழுது பார்க்கிற கடை ஒன்றில், வருகிறவர்கள் எல்லாருடைய கண்ணிலும் படும்படியாகக் கொட்டை எழுத்துகளில் ஒரு வாசகத்தை எழுதி வைத்திருந்தார்கள்.

நாங்கள் அழுக்காக இருக்கிறோம், உண்மைதான்! ஆனால், அந்த அழுக்குகள் எல்லாமே உங்களுடைய வாகனங்களில் இருந்து வந்தவை!’

இப்படி எழுதி வைத்திருக்கும் கடைக்காரரின் நோக்கம், தன்னுடைய வாடிக்கையாளர்களை அவமானப் படுத்ததுவது அல்ல. ‘வொர்க்ஷாப்’கள் என்றாலே அழுக்குதான் என்று சலித்துக் கொள்கிறவர்களுக்கு, மறுக்கமுடியாத ஒரு வாழ்வியல் உண்மையைப் பளிச்சென்று சொல்கிறது அந்த வாசகம்.

ஜப்பானியர்கள் தங்களது தொழிற்சாலைகளில் பார்த்த அதே பிரச்சனையை, நாம் ஒவ்வொருவரும் நிஜ வாழ்க்கையில் வெவ்வேறு ரூபங்களில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதனால் தான், நாம் கை வைக்கிற இடங்களிலெல்லாம், தேடும் பொருள் சுலபமாகக் கிடைக்காதபடி, அவசியமற்ற விஷயங்கள் குவிந்து கிடக்கின்றன.

தொடரும்...

## 10th Staff Day Children Sports Celebration

